தற்பொழுதுஇந்தச்சபையினால்பதின்மூன்றுதேசியகுழுக்கள்தாபிக்கப்பட்டுள்ளன.
அந்தக்குழுக்களாவனபின்வருமாறு:
ஆராய்ச்சிநிகழ்ச்சித்திட்டங்கள்மற்றும்கருத்திட்டங்கள்பற்றியதேசியகுழு (NCRPP),
தாவரவளர்ப்புபற்றியதேசியகுழு (NCPB),
விவசாயஉயிரியல்தொழில்நுட்பம்பற்றியதேசியகுழு(NCAB),தாவரங்கள்பாதுகாப்புபற்றியதே
சியகுழு(NCPP),அறுவடைக்குப்பின்தொழில்நுட்பம்பற்றியதேசியகுழு(NCPHT),சமூகப்பொரு
ளாதாரமற்றும்கொள்கைப்பகுப்பாய்வுபற்றியதேசியகுழு (NCSEPA),கால்நடைகள்,
நீரியல்வளங்கள்மற்றும்கடற்றொழிகள்பற்றியதேசியகுழு(NCLAF),பூவளர்ப்புஆராய்ச்சிமற்றும்
அபிவிருத்திபற்றியதேசியகுழு(NCFRD),இயற்கைவளங்கள்முகாமைத்துவம்பற்றியதேசியகுழு(

NCNRM),விவசாயஎந்திராதிகள்பற்றியதேசியகுழு
(NCAM),இயற்கைவிவசாயம்மற்றும்வனவளர்ப்புபற்றியதேசியகுழு(NCOAF),விவசாயத்தகவ
ல்வலையமைப்பு(AGRINET)பற்றியஆலோசனைக்குழுமற்றும்சர்வதேசஉறவுகள்பற்றியகுழு.

சபைக்குஉரித்தளிக்கப்பட்டுள்ளதொழிற்பாடுகள்

1. விவசாயஆராய்ச்சிவிடயங்களைஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத்தல்,

   திட்டமிடுதல்மற்றும்நிறைவேற்றுதல்,

   மற்றும்அமைச்சரினால்குறிப்பீடுசெய்யப்படாலம்எனும்சம்பந்தப்பட்டஅத்தகையஏனைய
   விடயங்கள்முதலியசகலவிடயங்கள்தொடர்பிலும்அரசாங்கத்திற்குஆலோசனையைவழங்
   குதல்.

2. தேசியஆராய்ச்சிக்கொள்கைகளையும்முன்னுரிமைகளையும்வகுத்தமைத்தல்.

3. தேசியஅபிவிருத்திக்குறிக்கோள்கைமேலும்விரிவாக்கும்நோக்கில்விவசாயஆராய்ச்சியின்ஒ
   ட்டுமொத்தக்குறிக்கோள்களையும்நோக்கெல்லையையும்வரையறுத்தல்.

4. விவசாயஆராய்ச்சிநிறுவகங்களுக்கும்மற்றும்தாபனங்களுக்கும்தேவையானநிதி,

   மனிதவலுமற்றும்பௌதீகவளங்கள்தொடர்பிலும்மற்றும்அத்தகையநிறுவனங்களினதும்,
   தாபனங்களினதும்ஊழியர்களின்சேவைநியதிகள்மற்றும்நிபந்தனைகள்தொடர்பிலும்பொ
   ருத்தமானஉரியஅதிகாரசபைகளுக்குசிபாரிசுகளைமுன்வைத்தல்.

5. நிறுவனம்மற்றும்திணைக்களம்சார்ந்தவிவசாயஆராய்ச்சிநிகழ்ச்சித்திட்டங்களைமீளாவுசெ
   ய்துநிதிமற்றும்திட்டமிடல்விடயத்திற்குப்பொறுப்புடையஅமைச்சரின்அமைச்சுக்கு,

   நிதியளித்தல்மற்றும்முன்னுரிமைதொடர்பானசிபாரிசுகளைமுன்வைத்தல்.

6. விவசாயஆராய்ச்சியில்சிறப்புத்தன்மையைஊக்குவித்துஉதவுதல்.

7. அரசாங்கத்திற்கும்மற்றும்விவசாயஆராய்ச்சிநிறுவகங்களுக்கும்இடையில்ஒருதொடர்பாட
   ல்மார்க்கமாகத்தொழிற்படுதல்.

8. நிறுவகங்களுக்குஇடையில்விவசாயஆராய்ச்சிக்கருத்திட்டங்களைஒழுங்கமைத்துஅத்தகை யகருத்திட்டங்களுக்குநிதியளித்தல்.

9. முழுமொத்தவிவசாயஆராய்ச்சித்துறைக்கானசேவைகளின்நமித்தம்விஷேடவிஞ்ஞானசே வைகளைஒழங்கமைத்துஅத்தகையசேவைகளுக்குநிதியளித்தல்.

10. விவசாயஆராய்ச்சிநிறுவகங்களுக்குஇடையில்நிலவும்உறவுகளைதேசியமற்றும்சர்வதேச அளவில்மேம்படச்செய்தல்.

11. விவசாயஆராய்ச்சியுடன்தொடர்புடையநிறுவகங்களுக்குஇடையிலானபிரச்சினைகள், தேசியமற்றும்சர்வதேசவிடயங்கள்என்பனதொடர்பானமாநாடுகளையும்மற்றும்கருத்தரை ங்குகளையும்ஏற்பாடுசெய்துவழங்குதல்.

12. விவசாயஆராய்ச்சிஊழியர்களுக்குபட்டப்பின்படிப்புப்பயிற்சிகளைஒழுங்கமைத்தல்மற்றும் வெளிநாடுகளிலுள்ளஅங்கீகரிக்கப்பட்டஆராய்ச்சிநிறுவகங்களின்விஞ்ஞானிகளைப்பரிமா ற்றிக்கொள்ளல்.

13. விவசாயஆராய்ச்சிக்கருத்திட்டங்களினதும், நிறுவகங்களினதும்மற்றும்பிரிவுகளினதும்செயலாற்றுகையைஅவ்வப்பொழுதுமீளாய்வு செய்தல்.

தலைவரின்அறிக்கை

அரசாங்கம்மாறியதையடுத்து 2015 ஆம்ஆண்டுசனவரிமாதத்தில்இ.வி.ஆ.கொ.ச. சபைகலைக்கப்பட்டு 2015 ஆம்ஆண்டுநவம்பர்மாதம் 06 ஆம்திகதிமீண்டும்புதியசபைதாபிக்கப்பட்டது.

ஒருசிலபுதியசபைஉறுப்பினர்களும்மற்றும்முன்னரிருந்தஏனையசபைஉறுப்பினர்களும்உள்ள டங்கியசபையின் 2015 ஆம்ஆண்டிற்கானமுதலாவதுசபைக்கூட்டம் 2015

ஆம்ஆண்டுநவம்பர்மாதம் 06 ஆம்திகதிநடைபெற்றது. 2015

ஆம்ஆண்டிற்கானநிதிஒதுக்கீடுதிறைசேரியினால்மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும், சபைக்கூட்டங்கள்நடத்தப்படாதகாரணத்தினால்மூலதனவரவுசெலவுத்திட்டம்சபையினால்அங்கீகரிக்கப்படவில்லை. 2015

ஆம்ஆண்டுசனவரிமாதம்முதல்ஒற்றோபர்மாதம்வரையானகாலப்பகுதியில், இ.வி.ஆ.கொ.ச. அலுவலர்கள்பலவித்தியாசமானபிரிவுகளில்பலதேசியக்குழுக்கூட்டங்களைஒழுங்கமைத்துபல் வேறுகஷ்டங்களுக்குமத்தியில்தமதுகடமைப்பணிகளைநிறைவேற்றியுள்ளனர்.

இ.வி.ஆ.கொ.ச.

கீழ்காணும்விதத்தில்ஏனையநிறுவனங்களின்கூட்டொத்துழைப்புடன்மூன்றுவேலையரங்குகளையும்ஒழுங்கமைத்துநடத்தியுள்ளது.

1. ஆசியஅனர்த்தஆயத்தநிலையத்தின்கூட்டொத்துழைப்பில் 2015

   ஆம்ஆண்டுயூன்மாதம் 22 ஆம்திகதிமுதல் 24

   ஆம்திகதிவரைவிவசாயத்தொழில்நுட்பப்பரிமாற்றல்செய்துகாண்பிப்புப்பயிற்சி வேலையரங்குக்கானதீர்மானஉதவுமுறைமைபற்றியபயிற்சிநிகழ்ச்சித்திட்டம்ஏற்பாடுசெய்யப்பட்டது.

2. ஆசியஅனர்த்தஆயத்தநிலையத்தின்கூட்டொத்துழைப்பில்,

   உயர்அதிகாரிகளின்பங்கேற்பில்,

   மாறிவரும்காலநிலையில்சுற்றாடல்நெகிழ்தன்மையைக்கட்டியெழுப்புவதற்கான காலநிலைத்தகவல்பிரயோகத்தைபிரதானமாகநெறிப்படுத்துவதுதொடர்பான கொள்கைத்தலையீடுபற்றியவேலையரங்கு 2015 ஆம்ஆண்டுயூன்மாதம் 25 ஆம்திகதிநடத்தப்பட்டது.

3. 2015 ஆம்ஆண்டிற்கானபூவளர்ப்புஆராய்ச்சிதொடர்பான8-வதுதேசியமாநாடு (NaSFLOR - 2015)இ.வி.ஆ.கொ.ச.

மற்றும்தேசியதாவரவியல்பூங்காத்திணைக்களம்ஆகியவற்றினால்இணைந்தஒரு நிகழ்ச்சித்திட்டமாக,

பேராதெனியரோயல்தாவரவியல்பூங்காவின்கல்விநிலையக்கேட்போர்கூடத்தில் 2015 ஆம்ஆண்டுதிசம்பர்மாதம் 21 ஆம்திகதிஏற்பாடுசெய்துநடத்தப்பட்டது.

தேசியவிவசாயஆராய்ச்சித்திட்டம்(NARP) 2015

ஆம்ஆண்டில்நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

குறித்தஆண்டில்நிதியளிக்கும்நிமித்தம்நாற்பது (40)

புதியஆராய்ச்சிநிகழ்ச்சிட்டங்கள்/கருத்திட்டங்கள்சிபாரிசுசெய்யப்பட்டிருந்தன.

விவசாயத்திணைக்களம்முன்வைத்தமுப்பத்திரெண்டு (32) கருத்திட்டங்களும்,

விவசாயஏற்றுமதித்திணைக்களம்முன்வைத்த 03 கருத்திட்டங்களும்,

ஹெக்டர்கொப்பேகடுவவிசாயஆராய்ச்சிப்பயிற்சிநிறுவகம்முன்வைத்த 05

கருத்திட்டங்களும்மதிப்பீட்டுக்குஉட்படுத்தப்பட்டுசிபாரிசுசெய்யப்பட்டிருந்தன.

விவசாயத்திணைக்களம்முன்வைத்த 57 கருத்திட்டங்களும்,

விவசாயஏற்றுமதித்திணைக்களம்முன்வைத்த 03 கருத்திட்டங்களும்,

ஹெக்டர்கொப்பேகடுவவிவசாயஆராய்ச்சிப்பயிற்சிநிறுவகம்முன்வைத்த 05

கருத்திட்டங்களும்மற்றும்தேசியபல்கலைக்கழகங்கள்முன்வைத்த 37 கருத்திட்டங்களும் 2015

ஆம்ஆண்டில்செயற்படுத்தப்பட்டன.

2015 ஆம் ஆண்டு இறுதியளவில் 83 கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. NARP கருத்திட்டங்களின்முன்னேற்றம்இ.வி.ஆ.கொ.ச. ஆராய்ச்சியாளர்களினால்கண்காணிக்கப்பட்டிருந்தன.

2015 ஆம்ஆண்டுதிசம்பர்மாதம்இறுதியளவில்மூன்றுசபைக்கூட்டங்கள்நடத்தப்பட்டிருந்தன.நிதிமற்றும்நிருவாகவிடயத்தின்கீழ்வரும்வழமையானசெயற்பாடுகள்மீள்தாபிக்கப்பட்டன.

கலாநிதிஎஸ்.எஸ்.பீ.டீ.ஜி. ஜயவர்த்தன
தலைவர்
இலங்கைவிவசாயஆராய்ச்சிக்கொள்கைக்கானசபை

பணிப்பாளரின்அறிக்கை

விவசாயஆராய்ச்சிவிடயங்களைத்திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், கண்காணித்தல், ஒருங்கிணைத்தல்மற்றும்விவசாயத்தில்ஆராய்ச்சியுடன்தொடர்புடையவிடயங்கள்தொடர்பில் ஆலோசனைவழங்குதல்ஆகியவற்றுக்கானஒருமத்தியமுகவர்நிலையம்என்றரீதியில்இ.வி.ஆ. கொ.ச.

நடைமுறையிலுள்ளதேவைகளுக்குஇணங்கஆராய்ச்சிக்குவழிகாட்டுவதில்முக்கியஒருபங்களிப் பைக்கொண்டுள்ளது. இன்று, இ.வி.ஆ.கொ.ச.

பிரதானமாகதேசியவிவசாயஆராய்ச்சித்திட்டத்தைவெற்றிகரமாகவகுத்தமைத்துஉறுதிசெய்வ தனூடாகதனதுகுறிக்கோள்களைஅடைகின்றது.

ஆராய்ச்சிமுகாமைத்துவம்

a) 2015 ஆம்ஆண்டிற்கானதேசியவிவசாயஆராய்ச்சித்திட்டம்(NARP)

இலங்கைத்தேசியவிவசாயஆராய்ச்சித்திட்டத்தில்(NARP)

பல்கலைக்கழகங்களின்விவசாயபீடங்களினதும்மற்றும்தேசியவிவசாயஆராய்ச்சிமுறைமை(N ARS) நிறுவகங்களினதும்ஆராய்ச்சிதொடர்பானநிகழ்ச்சித்திட்டங்கள்உள்ளடங்குகின்றன.

நிரல்அமைச்சுகளின்கொள்கைகளில்குறிப்பிட்டவொருகாலப்பகுதிக்குரியஅரசாங்கத்தின்அபி விருத்திக்கொள்கைவேலைச்சட்டகத்தில்இனங்காணப்பட்டுள்ளமுன்னுரிமைப்பிரிவுகளுக்குஇ ணங்கஇந்தநிகழ்ச்சித்திட்டங்கள்வடிவமைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களின்விவசாயபீடங்கள்தமதுகல்விசார்ந்ததேவைகளுக்கும்மற்றும்முக்கியதே சியவிடயங்களுக்கும்இணங்கதமதுஆராய்ச்சிநிகழ்ச்சித்திட்டங்களைவகுத்தமைக்கின்றன.

குறிப்பிடப்பட்டவொருகாலப்பகுதிக்குதேசியவிவசாயஆராய்ச்சித்திட்டத்தைத்தயாரிப்பதற்கானஒருதேசியஆவணத்தினுள்தொகுக்கப்படவேண்டியவித்தியாசமானஅமைச்சுகளின்கீழ்தொழிற்படுகின்றசகலNARSநிறுவகங்களினதும்ஆராய்ச்சிநிகழ்ச்சித்திட்டங்களைஇலங்கைவிவசாய ஆராய்ச்சிக்கொள்கைக்கானசபைஏற்றுமேற்கொள்கின்றது.

குறித்தநிறுவகங்களின்ஆராய்ச்சிநிகழ்ச்சித்திட்டங்களுக்கு/

கருத்திட்டங்களுக்குநிதியளிக்கும்நிமித்தம்கருத்திற்கொள்ளும்முகமாகதேசியவரவுசெலவுத்திட்டத்திணைக்களத்திற்கு/ பொதுத்திணைசேரிக்குஇந்தஆவணம்சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இ.வி.ஆ.கொ.ச.

சபைக்குசமர்ப்பிக்கப்படும்நிகழ்ச்சித்திட்டங்கள்நிதியளிப்பதுதொடர்பில்சிபாரிசைவழங்குவதற்காகஇ.வி.ஆ.கொ.ச.

சபையில்தொழிற்படுகின்றதேசியவிடயக்குழுக்களின்மதிப்பீட்டிற்குஅமைவானதாகக்காணப்படும்.

நிறுவகங்களின்ஆராய்ச்சிநிகழ்ச்சித்திட்டங்களுக்கானமுன்னேற்றம்பற்றியகண்காணிப்புப் பொறிமுறைத்திட்டமும்மற்றும்அத்தகையஆராய்ச்சிநிகழ்ச்சித்திட்டங்களின்/

கருத்திட்டங்களின்நிதிகளைப்பகிர்ந்தளிப்பதற்கானஒருபொறிமுறைத்திட்டமும்தயாரிக்கப்பட்டுNARPதிட்டத்தின்கீழ்இ.வி.ஆ.கொ.ச. நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

40 புதியஆராய்ச்சிநிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள் 2015

ஆம்ஆண்டில்நிதியளிப்புக்காகசிபாரிசுசெய்யப்பட்டிருந்தன.விவசாயத்திணைக்களம்முன்வைத்தமுப்பத்திரெண்டு (32) கருத்திட்டங்களும், விவசாயஏற்றுமதித்திணைக்களம்முன்வைத்த 03 கருத்திட்டங்களும், ஹெக்டர்கொப்பேகடுவவிசாயஆராய்ச்சிப்பயிற்சிநிறுவகம்முன்வைத்த 05 கருத்திட்டங்களும்மதிப்பீட்டுக்குஉட்படுத்தப்பட்டுசிபாரிசுசெய்யப்பட்டிருந்தன.

விவசாயத் திணைக்களம் முன்வைத்த முப்பத்திரெண்டு (32) கருத்திட்டங்களும், விவசாய ஏற்றுமதித் திணைக்களம் முன்வைத்த 03 கருத்திட்டங்களும், ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் முன்வைத்த 05 கருத்திட்டங்களும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டிருந்தன. விவசாயத் திணைக்களத்தின் 57 கருத்திட்டங்களும், விவசாய ஏற்றுமதித் திணைக்களத்தின் 03 கருத்திட்டங்களும், ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் 05 கருத்திட்டங்களும் மற்றும் தேசிய பல்கலைக்கழகங்களின் 37 கருத்திட்டங்களும் 2015 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டன. 2015 ஆம் ஆண்டு இறுதியளவில் 83 கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

b) இ.வி.ஆ.கொ.ச. தேசிய கொள்கைகள்

i) தாவரங்கள் பாதுகாப்பு பற்றிய தேசிய குழு (NCPP)

இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் கலாநிதி கீர்த்தி மொஹட்டி இந்தக் குழுவின் தலைவராகவும் மற்றும் கலாநிதி சானிக்கா ஜயசேக்கர செயலாளராகவும் பணியாற்றினர். 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், ஐந்து கூட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. இவற்றில் மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டன. எஞ்சிய கூட்டங்கள் நிதிகள் கிடையாத காரணத்தினால் இரத்துச்செய்யப்பட்டன. குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில், முன்னுரிமைக்கு ஏற்பாடு செய்தல், NARP கருத்திட்டங்களின் அரை ஆண்டு ரீதியான முன்னேற்றத்தைக் கண்காணித்தல், புதிய ஆராய்ச்சிப் பிரேரணைகளைப் பரிசீலனை செய்தல், விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கூட்டொத்துழைப்புடன் 2016 ஆம் ஆண்டில் உள்ளடக்க வேண்டிய தாவரங்கள் பாதுகாப்பு பற்றிய டிப்ளோமா மட்டத்தில் ஒரு பட்டப்பின்படிப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்தல் போன்ற பல செயற்பாடுகளை குழு மேற்கொண்டு நிறைவேற்றியது. குறித்த குழு தாவரங்கள் பாதுகாப்பிலுள்ள தேசிய முன்னுரிமைகளை இறைப்படுத்தியது. இற்றைப்படுத்தப்பட்ட ஆவணம் தாவரங்கள் பாதுகாப்பிலுள்ள

முன்னுரிமைகளை நிர்ணயிப்பதற்காக நடத்தப்பட்ட அக்கறையுடைய தரப்பு வேலையரங்கில் முன்வைக்கப்பட்டது. 2015 அம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான முன்னேற்ற அறிக்கைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தலைமை ஆய்வாளர்களுக்கு அவர்களின் கருத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளை முன்வைக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒவ்வொரு மூன்று கூட்டங்களிலும் முன்னேற்ற பற்றிய சமர்ப்பணங்கள் செய்யப்பட்டன. கருத்திட்டங்களின் ஆராய்ச்சி முறையியல்களை மேம்படுத்தும் நிமித்தம் குழு தேவையான வழிகாட்டல்களை வழங்கியது. 2016 ஆம் ஆண்டிற்கான NARP ஆராய்ச்சிக் கருத்திட்டப் பிரேரணைகளைப் பரிசீலனை செய்தல் என்ற விடயத்தின் கீழ், குழு கூடிய தனது மூன்று கூட்டங்களில் தாவரங்கள் பாதுகாப்பு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட பதினொரு புதிய ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்தியது. இந்த ஒவ்வொரு குழுக் கூட்டத்திலும் குழு ஆராய்ச்சி முறையியலையும், எட்டு ஆராய்ச்சிப் பிரேரணைகளின் பத்து ஆராய்ச்சிப் பிரேரணை எழுதுதலையும் வலுப்படுத்தி அதன் பின்னர் பத்து ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தில் கூட்டிணைக்கப்படுவதற்காக சிபாரிசு செய்யப்பட்டன.

ii) விவசாய உயிரியல் தொழில்நுட்பம் பற்றிய தேசிய குழு (NCAB)

விவசாய உயிரியல் தொழில்நுட்பம் பற்றிய தேசிய குழு அதனது இரண்டாம் தவணையின் மூன்றாவது ஆண்டிற்காக 2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. குழுவின் தலைவராக தொடர்ந்தும் பணியாற்றுமாறு கலாநிதி காமினி சமரசிங்க கேட்டுக் கொள்ளப்பட்டார். கலாநிதி பத்மினி சி. கிரிஹகம குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், 6 கூட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. 4 கூட்டங்கள் நடத்தப்பட்டன. இரண்டு கூட்டங்கள் நிதிகள் கிடையாத காரணத்தினால் இரத்துச் செய்யப்பட்டன.

இரண்டாவது காலாண்டின் ஆரம்பம் முதல் முடிவு வரை, குழு 2016 ஆம் ஆண்டிற்கான புதிய கருத்திட்டப் பிரேரணைகளை மதிப்பிடுதல், NARP கருத்திட்டங்களின் அரையாண்டு ரீதியான முன்னேற்றத்தைக் கண்காணித்தல், NARP கருத்திட்டங்களின் அதேவிடத்துப் பௌதீகக் கண்காப்பை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து நிறைவேற்றியது.

2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், ஐந்து விவசாய உயிரியல் தொழில்நுட்பக் கருத்திட்டங்கள் NARP நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. 2014 ஆம் ஆண்டிற்கான ஐந்து NARP கருத்திட்டங்களின் அரையாண்டு ரீதியான இரண்டாவது முன்னேற்றக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. 2015 ஆம் ஆண்டிற்கான ஏழு கருத்திட்டங்களின் அரையாண்டு ரீதியான முதலாவது முன்னேற்றக் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டது. இரண்டு கருத்திட்டங்களுக்கான அதேவிடத்து கருத்திட்டக் கண்காணிப்பு PVIC இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த அனைத்துக் கருத்திட்டங்களும் பௌதீக ரீதியிலும் மற்றும் நிதி ரீதியிலும் திருப்திகரமான முன்னேற்றத்தைக் காண்பித்திருந்தன. ஐந்து புதிய கருத்திட்டப் பிரேரணைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டிற்கான NARP திட்டத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டன. 2016 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

iii) தாவரங்கள் வளர்ப்பு பற்றிய தேசிய குழு (NCPB)

தாவரங்கள் வளர்ப்பு பற்றிய தேசிய குழு இரண்டாம் தவணையின் அதனது மூன்றாவது ஆண்டிற்காக 2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. கலாநிதி ஜே.எம் செனவிரத்ன குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். கலாநிதி பத்மினி சி. கிரிஹகம குழுவின் செயலாளராகப் பணியாற்றினார்.

2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், ஆறு கூட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. இவற்றில் ஐந்து கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஒரு கூட்டம் நிதிகள் கிடையாத காரணத்தினால் இரத்துச்

செய்யப்பட்டது. 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், யூன் மாதத்திலிருந்து, குழு 2016- NARP திட்டத்திற்கான புதிய கருத்திட்டப் பிரேரணைகளைப் பரிசீலனை செய்தல், NARP கருத்திட்டங்களின் அரையாண்டு ரீதியான முன்னேற்றத்தைக் கண்காணித்தல், NARP கருத்திட்டங்களின் அதேவிடத்துக் கருத்திட்டக் கண்காணிப்பை மேற்கொள்ளல் மற்றும் ஓராண்டு செயல் திட்டத்தைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகளை மகுழு முன்னெடுத்து நிறைவேற்றியது.

2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், தாவரங்கள் வளர்ப்பு தொடர்பான ஏழு கருத்திட்டங்கள் NARP நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், விவசாய ஏற்றுமதித் திணைக்களத்தினதும் மற்றும் விவசாயத் திணைக்களத்தினதும் விஞ்ஞானிகளினால் மேற்கொண்டு நடத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டிற்கான 19 NARP கருத்திட்டங்களின் முன்னேற்றக் கண்காணிப்பும் மற்றும் 2015 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டிற்கான 27 NARP கருத்திட்டங்களின் முன்னேற்றக் கண்காணிப்பும் 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆறு கருத்திட்டங்களின் அதேவிடத்து கருத்திட்டக் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டது. இந்த அனைத்துக் கருத்திட்டங்களும் பௌதீக ரீதியிலும் மற்றும் நிதி ரீதியிலும் திருப்திகரமான முன்னேற்றத்தைக் காண்பித்திருந்தன. 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், பத்து புதிய கருத்திட்டப் பிரேரணைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு NARP திட்டத்திற்காக சிபாரிசு செய்யப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

iv) கால்நடைகள், நீரியல் வளங்கள் மற்றும் கடற்றொழில்கள் பற்றிய தேசிய குழு (NCLAF)

2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், 2016 ஆம் ஆண்டின் ஒரு NARP கருத்திட்டமாக, தென்னை ஆராய்ச்சி நிறுவகத்தின் விவசாயப் பொருளியலாளர்/சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி சாரினி சோமசிறி அவர்களினால் தெங்கு என்ற விடயத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட உயர் பயிர் கால்நடைப் பண்ணை முறைமை மாதிரிகளின் மதிப்பீடு என்ற

தலைப்பிலான ஒரு கருத்திட்டத்தை குழு மதிப்பீடு செய்தது. இந்த ஆராய்ச்சிப் பிரேரணை இரண்டு மீளாய்வாளர்களின் கருத்துரைகளுக்கு அமைய, 2016 - NARP திட்டத்தின் நிமித்தம் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. பேராசிரியர் என்.எஸ்.பீ.எம். அத்தபத்து குழுவின் தலைவராகப் பணியாற்றினார். கலாநிதி பிரான்க் நிரன்ஜன் குழுவின் செயலாளராகப் பணியாற்றினார்.

ஒரு அக்கறையுடைய தரப்பு வேலையரங்கை நடத்துவதன் மூலம் 2012-2016 கால்நடைகள், நீரியல் வளங்கள் மற்றும் கடற்றொழில்கள் பற்றிய ஆராய்ச்சி முன்னுரிமை ஆவணத்தை இற்றைப்படுத்துவதற்கு குழு தீர்மானித்தது. தற்போதைய ஆவணத்தின் மாதிரிப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தந்த அமைச்சுக்களிலிருந்து கொள்கை சார்ந்த இரண்டு ஆவணங்களை (கால்நடைகள் மற்றும் கடற்றொழில்கள்) பெற்றுக் கொள்வதற்கு குழு தீர்மானித்தது. வள நபர்கள் அடங்கிய முன்னைய பட்டியல் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்படுதல் வேண்டும்.

நீரியல் வளங்கள் மற்றும் கடற்றொழிகள் பற்றிய ஆராய்ச்சி முன்னுரிமைகளை மீளாய்வு செய்வதற்காக நீரியல் வளங்கள் மற்றும் கடற்றொழில்கள் அமைச்சில் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி நடைபெற்ற கொள்கை தொடர்பான கலந்துரையாடலின் போது குழு செயலாளர்களை சந்தித்தது. மற்றுமொரு கொள்கை தொடர்பான கலந்துரையாடல் கால்நடைகள் துறையிலுள்ள தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகளை இற்றைப்படுத்தும் பொருட்டு கிராயமிப் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் செயலாளருடன் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலின் பயனாக, செயலாளர், இ.வி.ஆ.கொ.ச. சபைக்கு பொருத்தமான ஒரு உத்தியோகத்தரைப் பெயரிடுமாறு விலங்குகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுரைகளை வழங்கினார். அரசாங்கத்தின் கொள்கைப் பணிப்புரைகளுக்கு இணங்க தேவையான திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டன. ஆராய்ச்சி முன்னுரிமை ஆவணத்தை மீளாய்வு செய்யும் பொருடடு அமைச்சினதும் மற்றும் DAPH திணைக்களத்தினதும் உதவிக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது. CARP - VRI மீளாய்வு அறிக்கையின் அடிப்படையில் சீராக்க

வேண்டிய இடைவெளிகள் பற்றி ஆராய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஆராய்ச்சியில் அரச மற்றும் தனியார் துறைப் பங்காளித்துவத்தை இலகுபடுத்துவதற்கான ஒரு பொறிமுறைத்திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கும் உடன்பாடு எட்டப்பட்டது. நீரியல் வளங்கள் மற்றும் கடற்றொழில்கள் துறையில் புதிய ஆராய்ச்சி விடயங்கள் பற்றிக் கலந்துரையாடும் பொருட்டு 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி NARA திட்டத்திற்கான ஆராய்ச்சி செயல் திட்டத்தை வகுத்தமைப்பதற்கான ஆராய்ச்சி ஆவண சமர்ப்பண அமர்வில் குழு சபையைப் பிரதிநிதிப்படுத்திக் கலந்துகொண்டது.

v) சமூகப் பொருளாதார கொள்கைப் பகுப்பாய்வு பற்றிய தேசிய குழு (NCSEPA)

இந்தத் தேசிய குழுவின் புதிய தலைவராக பேராசிரியர் எச்.எல்.ஜே. வீரஹேவா நியமிக்கப்பட்டார். 2015 ஆம் ஆண்டில் சபைக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். கலாநிதி பிரான்க் நிரன்ஜன் குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். NARP / 2014 ஆராய்ச்சி மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டிற்கான புதிய பிரேரணை தயாரித்தலும் மேற்கொள்ளப்பட்டது. HARTI நிறுவகத்திற்காக நிறைவு செய்யப்பட்டு திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதின் மூன்று கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. மேலதிகத் திருத்தத்திற்காக கருத்துரைகள் வழங்கப்பட்டன. விவசாயத் திணைக்களத்தின் சமூகப் பொருளாதாரத் திட்டமிடல் நிலையத்தினால் (SEPC/DOA) சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு பூர்த்தியான ஆராய்ச்சிக் கருத்திட்டங்களும் மதிப்பீடு செய்யப்பட்டன. 2016 ஆம் ஆண்டிற்கான ஒரு ஆராய்ச்சிப் பிரேரணை (தலைப்பு: மனிதனின் செயற்பாடுகளினால் குளக் கட்டுக்களில் அதிகளவு வண்டில் மண் காணப்படுவதும் மற்றும் விவசாயத்தின் மீது அதன் தாக்கமும் பற்றிய ஆய்வு) HARTI நிறுவகத்தில் வைத்து இந்தக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. சிறிய திருத்தங்களுடன் அந்தப் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சமூகப் பொருளாதார ஆராய்ச்சி முன்னுரிமைகளின் மீளாய்வுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டது. இந்த விடயம் பற்றி கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. மீளாய்வை

மேற்கொள்வதற்கு முன்னர் அரசாங்கம் பற்றிய கொள்கைகளைப் புரிந்துகொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களைச் சந்தித்துப் பேசுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

vi) பூ வளர்ப்பு ஆராய்ச்சி அபிவிருத்தி பற்றிய தேசிய குழு (NCFRD)

2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், கலாநிதி டீ.எச்.பி. பெரமுணகம பூ வளர்ப்பு ஆராய்ச்சி அபிவிருத்தி பற்றிய தேசிய குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். கலாநிதி எஸ்.எம்.பி. சந்திரா பத்மினி குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். இந்தக் குழு தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்துடன் இணைந்து 2016 ஆம் ஆண்டிற்கான பூ வளர்ப்பு ஆராய்ச்சித் தேசிய மாநாட்டை (NASFLOR) ஒரு கூட்டு நிகழ்ச்சித்திட்டமாக ஏற்பாடு செய்தது. தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தில் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் பற்றி மதிப்பிடப்பட்டது. கருத்திட்டத்தின் தலைப்புகள் பின்வருமாறு:

1. சிறிய மற்றும் நடுத்தர அளவான பூ வளர்ப்பவர்களினால் உற்பத்தி செய்யப்படும் பூக்களின் (ரோஜா, கெர்பெரா, அந்தூரியம், கிரிசெந்தமும்) தரத்தையும் கணியத்தையும் மேம்படச் செய்வதற்குப் பொருத்தமான தொழில்நுட்பங்களை இனங்காணுதலும் மற்றும் பரம்பச் செய்தலும்

2. தரமான நடுகைக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கும் மற்றும் நோய்களைக் குறைப்பதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட *Dracaena sanderiyana* கல்டிவாசுகளுக்கான துரித *Ex Vitro* உற்பத்தி வளர்ச்சி நடைமுறை அபிவிருத்தி

3. புதிய வெட்டுப் பூ இனங்களை உற்பத்தி செய்வதற்கான நேரடிப் பாரம்பரிய பரிமாற்றல் தொழில்நுட்ப அபிவிருத்தி

4. நிரமூர்த்தத்தை இரட்டிப்பாக்குவதனூடாக இலங்கையில் பரந்து வாழும் பினாரா

(*Exacum pallidum*) மூலிகைத் தாவரத்தின் பூ வளர்ப்பு சாத்தியத்தை அதிகரித்தல்

5. பாரம்பரிய பொறியியல் முறையினூடாக புதிய ஒரு பூ நிறம், முன்கூட்டி மலர்தல் மற்றும் புள்ளித் தாவரக் கட்டமைப்பு ஆகியவற்றுக்கான இலங்கை அந்தூரிய இனங்களின் பாரம்பரிய மேம்பாடு

2016 ஆம் ஆண்டிற்காக குழுவுக்கு சபையினால் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

vii) அறுவடைக்குப் பின்-தொழில்நுட்ப மற்றும் மானிடப் போஷாக்கு பற்றிய தேசிய குழு

கமத்தொழில் அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளரும், உணவு விவசாய அமைப்பின் உதவிப் பிரதிநிதியுமான கலாநிதி டீ.பீ.ரீ. விஜேரத்ன குழுவின் தலைவராகப் பணியாற்றினார். கலாநிதி சானிக்கா ஜயசேக்கர குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில், இரண்டு குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. குழுவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. 2016 ஆம் ஆண்டிற்காக அறுவடைக்குப் பின்-தொழில்நுட்பப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு ஆராய்ச்சிப் பிரேரணைகள் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டன. குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்ட இரண்டு ஆராய்ச்சிப் பிரேரணைகளும் 2016 NARP திட்டத்திற்காக சிபாரிசு செய்யப்பட்டன.
2. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறுவடைக்குப் பின்-தொழில்நுட்ப நிறுவகத்தின் (அ.பி.தொ.நி.) ஆராய்ச்சிப் பிரேரணைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

viii) இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய தேசிய குழு (NCNRM)

2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், பேராசிரியர் சாந்தி ராஜபக்ஷ குழுவின் தலைவராகப் பணியாற்றினார். கலாநிதி எஸ்.எம்.பி. சந்திரா பத்மினி குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய தேசிய குழு 2015 ஆம் ஆண்டின் தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தில் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் முன்னேற்றததை மதிப்பிட்டு, 2016 ஆம் ஆண்டிற்கான புதிய ஆராய்ச்சிக் கருத்திட்டத்தையும் பரிசீலனை செய்தது. ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் தலைப்புகள் பின்வருமாறு:

பரிசீலனை செய்யப்பட்ட கருத்திட்டங்கள் - NARP 2016

1. பொருளாதார ரீதியிலும் மற்றும் சுற்றாடல் ரீதியிலும் பொருத்தமான பசளைத் திறமுறைத்திட்டத்தைக் கண்டறிவதற்கான வித்தியாசமான விவசா உயிரியல் பிரதேசங்களில் பச்சை வீட்டுத் தாவரப் பயிர்களுக்கு ஏலவேயிருக்கும் பசளைத் திறமுறைத்திட்டம் பற்றிய மதிப்பாய்வு

கருத்திட்டங்களின் முன்னேற்றம் - NARP 2015:

1. இலங்கையின் வட மாகாணத்தில் நுண் நீர்ப்பாசன முறைமைகள் குறைவாகப் பின்பற்றப்படுவதற்கான காரணங்களை இனங்காணுதலும் மற்றும் பின்பற்றல் வீதங்களை அதிகரிப்பதற்குப் பொருத்தமான பரிகார நடவடிக்கைகளை வகுத்தமைத்தலும்
2. பப்பாசியின் வளர்ச்சி, அறுவடை மற்றும் பழத்தின் தரம் ஆகியன தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட போஷாக்குகளின் தாழை ஊட்டலின் பயன்
3. ஒரு சில விஷேட முகாமைத்துவ செயன்முறைகளின் மூலம் வார். மில்லேவா சுவந்தெல் மற்றும் மூசா எஸ்பிபி வாழைப் பழத்தின் தரத்தினதும் மற்றும் விளைச்சலினதும் மேம்பாடு
4. வட மேல் மாகாணத்தில் காய்கறிகளின் தீவிரப் பயிர்ச்செய்கைக்கான நிலையான தாவரப் போஷாக்கு முகாமைத்துவப் பொதி அபிவிருத்தி

5. மகரந்தம் மற்றும் அரிசி மலட்டு ஸ்பிக்கெலெட்டு ஆகியவற்றுக்கான RH பெறுமானமும் கனப்பி மட்ட வெப்பநிலையில் அதிக வளிமண்டல வெப்பநிலையினதும் மற்றும் ஈரப்பதனினதும் அழுத்தம் தொடர்பான தாக்கம்
6. இலங்கையின் மண் பொசுபரசு வரைபடத்தின் அடிப்படையில் அரிசிக்கான பொசுபரசுப் பசளைத் தேவைப்பாட்டை நிர்ணயித்தல்
7. இலங்கையிலுள்ள பெரும்பாக விவசாய சுற்றாடல் பிராந்தியங்களில் வித்தியாசமான மண் பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் மண்ணரிப்பை அளவிடுதல்

2016 ஆம் ஆண்டிற்காக குழுவுக்கு சபையினால் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

ix) இயற்கை விவசாய வன வளர்ப்பு பற்றிய தேசிய குழு (NCOA மற்றும்F)

இந்தக் குழுவிலுள்ள உறுப்பினர்களின் நியமன காலம் 2015 ஆம் ஆண்டில் முடிவடைந்தது. ஆகையால், 2016 அம் ஆண்டிலிருந்து குழுவில் பணியாற்றும் பொருட்டு இயற்கை விவசாயத்திலும் மற்றும்/அல்லது வன வளர்ப்பிலும் ஈடுபடும் பொருத்தமான நிறுவனங்களிடமிருந்து புதிய நியமனத்திற்கான பெயர்கள் அழைக்கப்பட்டன. முன்னைய குழுவின் இறுதிக் கூட்டம் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் திகதி நடைபெற்றது. பேராசிரியர் எஸ்.பி. நிசங்க இந்தக் குழுவின் தலைவராகப் பணியாற்றினார். திருமதி சத்துரங்க தவுலகல குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். இந்தக் கூட்டத்தில், 'தென்னைகளுக்கு இடையில் மர முந்திரிகையை நடுதலின் தொழில்நுட்ப, நிதி மற்றும் சமூக அம்சங்கள்' என்ற கருத்திட்டம் இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தினால் ஏற்று முன்னெடுக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டம் கலந்துரையாடலின் நிமித்தம் எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும், இயற்கை விவசாய ஆராய்ச்சியில் தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகள் ஆவணம் அச்சீட்டிற்காகத் தயாரித்து நிறைவு செய்யப்பட்டது.

x) விவசாய எந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் பற்றிய தேசிய குழு (NCAME)

விவசாயப் பொறிமுறையின் மூலம் அபிவிருத்தியையும் ஆராய்ச்சியையும் ஒருங்கிணைத்து இலகுபடுத்தும் பொருட்டு, அக்கறையுடைய தரப்பு நிறுவனங்களைப் பிரதிநிதிப்படுத்துகின்ற, இ.வி.ஆ.கொ.ச. சபையினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் இந்த விவசாய எந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் பற்றிய தேசிய குழுவில் அடங்குகின்றனர். பேராசிரியர் எம்.ஏ.ஆர்.வி. பெர்னாந்து இந்தக் குழுவின் தலைவராகப் பணியாற்றினார். திரு சமீர திஸாநாயக்க குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். பொறிமுறைப்படுத்தலானது எப்பொழுதும் விவசாயத்திலுள்ள முன்னுரிமைப் பிரிவுகளில் ஒரு பிரிவாக இருந்து வந்துள்ளது. அண்மை காலக் கொள்கைகளின் அமுலாக்கம் விவசாயத்தின் பயனுள்ள நிலையான பயிர் உற்பத்திக்கும் மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் குறைவுக்கும் இந்த பொறிமுறைப்படுத்தலை பொருத்தமான ஒரு மாற்றுவழிமுறையாக ஆக்கியுள்ளது. விவசாயத் துறைக்குப் பொருத்தமான பொறிமுறையாக்கல்களை இனங்காணுதல் மற்றும் அதற்கு இணங்க விவசாயத்தில் தற்போதுள்ள அபிவிருத்தியையும், பொருத்தமான விடயங்களையும் அடையாளப்படுத்தும் பொருட்டு ஆராய்ச்சி முன்னுரிமைகளை வகுத்தமைப்பதும் இந்தக் குழுவின் குறிக்கோள்களாகும். குழு தற்போதைய பொறிமுறையாக்கல் நடபடிமுறையின் நிலையை இனங்கண்டுள்ளது. அதற்கு இணங்க ஆராய்ச்சி முன்னுரிமைகள் இனங்காணல் விடயமும் நிறைவு செய்யப்பட்டது.

c) **சர்வதேச உறவுகள்**

இந்த ஆண்டு காலப் பகுதியில் மூலதன நிதிகள் கிடையாத காரணத்தினால், இந்தக் குழுவினால் செயற்படுத்தப்படுவதற்கிருந்த செயற்பாடுகள் நிதிகள் பற்றாக்குறையினால் தடைப்பட்டன. திட்டமிடப்பட்ட ஆய்வு விஜயங்கள் / விஞ்ஞானிகளுக்கான நீண்டகால அல்லது குறுங்காலப் பயிற்சி / விஞ்ஞானிகளின் பரிமாற்றல் மற்றும் நிபுணர்கள் தூதுக் குழு விஜயம் முதலியன பு.ஒ. ஒப்பந்தங்களின் கீழ் இடம்பெறவில்லை.

குறித் தமீளாய்வு ஆண்கு காலப் பகுதியில், பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. சர்வதேச கூட்டொத்துழைப்புடனான பயிற்சி / விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

a) ஆசிய அனர்த்த ஆயத்த நிலையத்தின் கூட்டொத்துழைப்பில் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விவசாயத் தொழில்நுட்பப் பரிமாற்றல் மாதிரிப் பயிற்சி வேலையரங்குக்கான (DSSAT) தீர்மான உதவு முறைமை பற்றிய ஒரு பயிற்சியை இ.வி.ஆ.கொ.ச. ஒருங்கிணைத்தது.

b) ஆசிய அனர்த்த ஆயத்த நிலையத்தின் கூட்டொத்துழைப்பில், உயர் மட்ட அதிகாரிகளின் பங்கேற்பில் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற மாறிவரும் காலநிலையில் சுற்றாடல் முறைமையின் நெகிழ்தன்மையைக் கட்டியெழுப்புவதற்கு காலநிலை தொடர்பான தகவல்களின் பிரயோகத்தை பிரதானமாக நெறிப்படுத்துவது தொடர்பான கொள்கைத் தலையீடு பற்றிய வேலையரங்னை இ.வி.ஆ.கொ.ச. ஒருங்கிணைத்தது.

2. புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:

a) இ.வி.ஆ.கொ.ச. ஆசிய பசுபிக் விவசாய ஆராய்ச்சி நிறுவகங்கள் அமைப்பின் (APAARI) நிறைவேற்றுக் குழுவுக்கான உறுப்புரிமையைப் பெற்றது. இந்த சபை 2015 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி தாய்லாந்தில் நடைபெற்ற முதலாவது நிறைவேற்றுக் குழுவில் (நி.கு.) பங்குபற்றியது.

b) குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில், APAARI அமைப்பு இ.வி.ஆ.கொ.ச. ஊடாக விவசாயத் திணைக்களத்திற்கு ஒரு PhD புலமைப்பரிசிலை வழங்கியது.

c) APAARI அமைப்பு 2015 ஆம் ஆண்டு 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை சீனாவின் தாய்பெய் நகரத்தில் நடைபெற்ற கிராமியப் பொருளியல்கள் பற்றிய ஆய்வுக் குழுவில் பங்குபற்றியமைக்கான ஒரு அந்தஸ்து நிலையையும் வழங்கியது. மலேசியாவில் 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை நடைபெற்ற கருத்திட்டக்

கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு பற்றிய மாநாட்டில் பங்குபற்றுவதற்கான ஒரு வாய்ப்பும் இ.வி.ஆ.கொ.ச. சபைக்கு வழங்கப்பட்டது. இ.வி.ஆ.கொ.ச. 2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை தாய்லாந்து பாங்கொக் நகரத்தில் நடைபெற்ற கொள்கைப பேச்சுவார்த்தை தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களிலும் மற்றும் 2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற APAARI அமைப்பின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலும் கலந்துகொண்டது. கொள்கைப் பேச்சுவார்த்தை நிகழ்ச்சித்திட்டத்தின் போது இ.வி.ஆ.கொ.ச. செயலாளரினால் / பணிப்பாளரினால் நாடு தொடர்பான ஆவணப் பத்திரம் ஒன்றும் மற்றும் ஒரு சுவரொட்டியும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

d) நூலக / விவசாயத் தகவல் வலையமைப்பு (AGRINET) 2015

இ.வி.ஆ.கொ.ச. நூலகம் விஞ்ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும், தனியார் துறையினருக்கும் மற்றும் அ.சா. நிறுவனங்களுக்கும் விஞ்ஞானத் தொழில்நுட்பத் தகவல்களை வழங்குகின்ற விவசாயத் தகவல் வலையமைப்புக்கான (AGRINET) முக்கியமான ஒரு பிரிவாகும். 26 நூலகங்கள் இந்த வலையமைப்பின் (விவசாய ஆராய்ச்சி நிறுவகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் விவசாய பீடங்கள்) உறுப்பு நிறுவனங்களாகத் தொழிற்படுகின்றன. AGRINET விவசாய விஞ்ஞானிகளினதும் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களினதும் விவசாயத் தகவல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வளப் பகிர்வு சார்ந்த பல செயற்பாடுகளை மேற்கொண்டு நிறைவேற்றியது.

இலங்கைத் தேசிய விவாசய புத்தக விவரணப் பிரிவு (NAB) இலங்கையில் இலங்கை விஞ்ஞானிகளினால் எழுதப்படும் அல்லது தயாரிக்கப்படும் விவசாய ஆராய்ச்சிக் கட்டுரைகள் தொடர்பான தகவல்களை வழங்குகின்றது. இந்தப் புத்தக விவரணம் வருடாந்த அடிப்படையில் இற்றைப்படுத்தப்படுகின்றது. நடைமுறை ஆண்டில் NAB தரவுத் தளத்திற்கு 128 பதிவுகளும் மற்றும் 10,805 பதிவறிக்கைகளும் சேர்க்கப்பட்டன. குறித்த ஆண்டு காலப் பகுதியில், NARS விஞ்ஞானிகளின் வேண்டுகோள்களுக்கு இணங்க அவர்களுக்காக AGORA மற்றும் இன்டர்நெட் வசதிகளைப் பயன்படுததி 09 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

AGRINET வலையமைப்பு AGORA இலிருந்து கிடைத்த 14 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் மற்றும் இன்டெர்நெட் வசதிகளினூடாக் கிடைத்த 46 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் இலங்கை விஞ்ஞானிகளுக்கு வழங்கியது.

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபை (NLDSB) தனது கேட்போர்கூடத்தில் பொது நூலகங்களினதும் மறறும் NLDSB சபையினதும் ஊழியர்களுக்கு 'இலங்கையில் நூலக வலையமைப்புகள் பற்றிய இரண்டு கருத்தரங்குகளை' ஏற்பாடு செய்திருந்தது. இ.வி.ஆ.கொ.ச. நூலகம் இந்தக் கருத்தரங்குகளின் போது விவசாயத் தகவல் வலையமைப்பு (AGRINET) தொடர்பான விரிவுரைகளை நிகழ்த்தியது.

e) **தேசிய தகவல் தரவுத்தளம்**

2014 ஆம் ஆண்டிற்கான உண்மையான தரவுகளைச் சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 20 தரவுத் தளங்களில் பதினாறு தரவுத்தளங்களிலிருந்து (DEA, NARA, IPHT,NBG, FRDI, GLORDC, RARDC-AR, RARDC-MK, FRU, PGRC, NRMC) 2014 ஆம் ஆண்டிற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. 2014 ஆம் ஆண்டின் தரவு படிமுறைப்படுத்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டிற்காக சேகரிக்கப்பட்ட தரவுத்தளங்கள் தொகுக்கப்பட்டன. நிறுவன சார் விஜயங்களை மேற்கொள்ள முடியாது போனமை மற்றும் நிதி வரையறைகள் என்பவற்றின் காரணமாக தரவு சேகரிப்பு நடைமுறைகள் இடையில் தடைப்பட்டன.

f) **45 ஆம் இலக்க மு.சே.தி. (MSD) சுற்றறிக்கை அமுலாக்கம் பற்றிய குழு**

இலங்கை அரசாங்கம் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு மாதாந்த ஆராய்ச்சிக் கொடுப்பனவை வழங்குவதன் மூலம் அவர்களின் நிபுணத்துவத் துறைக்குப் பொருத்தமானவாறு தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உன்னத புத்தாக்க ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையில் அவர்களை ஊக்குவிப்பதற்கான ஒரு பொறிமுறைத்திட்டமாக பெறுமதியான

ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளும் நிமித்தம் ஒரு ஊக்குவிப்புத் தொகையை வழங்கியுள்ளது. இது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2/2014 ஆம் இலக்கச் சுற்றறிக்கையினூடாகச் செயற்படுத்தப்படுகின்றது. குறித்த சுற்றறிக்கைக்கு இணங்க, இ.வி.ஆ.கொ.ச. விவசாயத் துறையிலுள்ள விவசாய ஆராய்ச்சியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கொடுப்பனவை அங்கீகரிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில், 64 ஆராய்ச்சியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கொடுப்பனவுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

g) **இலங்கை உணவு விவசாய சஞ்சிகை**

SLJFA என சுருக்கமாக அழைக்கப்படுகின்ற இலங்கை உணவு விவசாய சஞ்சிகை, விவசாய ஆராய்ச்சி நிறுவகங்களுக்கு இடையில் நிலவும் உறவுகளை தேசிய மற்றும் சர்வதேச அளவுகளில் மேம்படச்செய்வதற்காகவும், விவசாய ஆராய்ச்சியில் சிறப்புப் பெறுவதற்கு உதவுவதற்காகவும் மற்றும் விவசாய ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்காகவும், இ.வி.ஆ.கொ.ச. சட்டத்தின் 10 (f) மற்றும் (j) ஆகிய பிரிவுகளுக்கு இணங்க இ.வி.ஆ.கொ.ச. மூலம் பிரசுரிக்கப்படுகின்றது. சஞ்சிகைப் பதிப்பு சபை ஆராய்ச்சி நிறுவகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவற்றினது 13 உறுப்பினர் விஞ்ஞானிகள் குழுவினால் பிரதிநிதிப்படுத்தப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டன. சஞ்சிகையின் விஞ்ஞான ரீதியான தரத்தையும் தொடர்தன்மையையும் பேணும் பொருட்டு முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. சஞ்சிகைப் பதிப்பு சபைக்கு சர்வதேச உறுப்பினர்களை நியமித்தல், வி.ஆ.கொ.ச. இணையத்தளத்தில் சஞ்சிகையை உள்ளீர்த்தல், எதிர்வரும் பிரச்சினைகளுக்கான புதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. சஞ்சிகை ஆசிரியரின் வழிகாட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டன. ஆராய்ச்சி நிறுவகங்களின் அனைத்துத் தலைவர்களிடமிருந்தும், பல்கலைக்கழகங்களின் விவசாய பீடங்களினது பீடாதிபதிகளிடமிருந்தும், மற்றும் இந்தியா, பங்காளதேசம், நோபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலுள்ள ஆராய்ச்சி சபைகளிடமிருந்தும் ஆராய்ச்சி தொடர்பான ஆவணப் பத்திரங்கள் அழைக்கப்பட்டன. இ.வி.ஆ.கொ.ச. சஞ்சிகைப் பதிப்பாசிரியரின் வழிகாட்டல்களை சபையின் இணைத்தளத்தில்

உள்ளீர்க்குமாறும் மற்றும் பதிப்பாசிரியர் சபைக்கு சர்வதேச விஞ்ஞானிகளை நியமிக்கும் வகையில் ஆலோசனை வழங்குமாறும் விவசாய ஆராய்ச்சி நிறுவகங்களுக்கான ஆசிய பசுபிக் அமைப்பிடம் வேண்டுகோளை விடுத்தது. .

2015 ஆம் ஆண்டில் இரண்டு சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன. ஒரு ஆண்டின் ஆகஸ்ட் மாதமும் மற்றும் திசம்பம் மாதமும் வெளியிடும் மாதங்களாக இனங்காணப்பட்டன. சஞ்சிகையின் 1 மற்றும் 2 ஆகியவற்றினதும் 1-வது வெளியீட்டுத் தொகுதியினதும் இறுதிப் பதிப்பு நிறைவு செய்யப்பட்டது. ஒவ்வொன்றிலிருந்தும் 300 பிரதிகள் 2015 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டன. குறித்த சஞ்சிகையின் ISSN இலக்கம் ISSN 2424-6913 ஆகக் காணப்பட்டது. சஞ்சிகையின் முதலாவது வெளியீட்டை ஏனைய பதிப்பாசிரியர்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் இடையில் இலவசமாகப் பகிர்ந்தளிப்பதற்கான தீர்மானத்திற்கு உறுப்பினர்கள் உடன்பட்டனர். சஞ்சிகை தொடர்பான புதிய மின்னஞ்சல் முகவரி sljfa@slcarp.lk ஆகக் காணப்பட்டது. ஒரு சஞ்சிகைப் பதிப்பு அலுவலகம் அல்லது கரும பீடம் தேவையான வசதிகளுடன் இ.வி.ஆ.கொ.ச. சபையில் தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதற்கு குழு உடன்பட்டது. ஒரு ஆங்கிலப் பதிப்பாசிரியரின் சேவை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். பதிப்பாசிரியர் சபையின் உறுப்புரிமை குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியினுள் மாற்றப்படுதல் வேண்டும். பதிப்பாசிரியர் சபையின் தற்போதைய தலைவர் பிரதான பதிப்பாசிரியராக இருக்க வேண்டும் என்பதற்கு உறுப்பினர்கள் உடன்பட்டனர்.

இ.வி.ஆ.கொ.ச. விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளித்து, இந்தியாவின் விவசாய ஆராய்ச்சி மன்றம் (ICAR) புது தில்லி ICAR கிரிஸிபஹவான் நிலையத்தின் தலைமை விஞ்ஞானி கலாநிதி அருணாசலம் அவர்களை பதிப்பாசிரியர் சபையின் சர்வதேச உறுப்பினர் ஒருவராகப் பெயர் குறித்துள்ளது.

பேராசிரியர் ஏ.ஆர். ஆரியரத்ன

செயலாளர் / பணிப்பாளர்

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை


புலமைப்பரிசில் அடைவு - 2015

பூ வளர்ப்பு ஆராய்ச்சி பற்றிய 8-வது தேசிய மாநாடு 2015 (NaSFLOR - 2015)

பூ வளர்ப்பு ஆராய்ச்சி பற்றிய 8-வது மாநாடு (NaSFLOR - 2015) இ.வி.ஆ.கொ.ச. சபையும் மற்றும் தேசியத் தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் ஆகியன இணைந்து பேராதெனிய ரோயல் தாவரவியல் பூங்காவினது கல்வி நிலையத்தின் கேட்போர்கூடத்தில் 2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 21 ஆம் திகதி ஒரு கூட்டு நிகழ்ச்சித்திட்டமாக ஏற்பாடு செய்திருந்தன. நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வன விலங்குகள் பற்றிய அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா இந்த நிகழ்வில் பிரதான அதிதியாக் கலந்து சிறப்பித்தார். பூ வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த துறையில் அண்மை கால ஆராய்ச்சி முடிவுகள் ஆராயப்பட்டன. விஞ்ஞானிகள், ஏற்றுமதியாளர்கள், சிறு மற்றும் நடுத்தர அளவில் வளர்ப்பவர்களின் பிரதிநிதிகள் மற்றும் கொள்கை ஆக்குநர் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்குபற்றினார். மூன்று தொழில்நுட்பக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. 18 ஆராய்ச்சிப் பத்திர ஆவணங்கள் முன்வைக்கப்பட்டன. இது தவிர, 16 சுவரொட்டிகளும் பிரசுரிக்கப்பட்டன.



மாநாட்டில் பங்குபற்றியவர்களின் முன்னிலையில் நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வன விலங்குகள் பற்றிய அமைச்சர் கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா அவர்கள் உரையாற்றும் காட்சி






இ.வி.ஆ.கொ.ச. பூ வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய குழுவுக்கு கலாநிதி சிறில் விஜேசுந்தர அவர்கள் வழங்கிய சேவையையும் மற்றும் வழிகாட்டல்களையும் மதித்து நினைவுச் சின்னத்தை வழங்கும் காட்சி

சர்வதேச கூட்டொத்துழைப்புடன் கூடிய பயிற்சி / விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்


- இ.வி.ஆ.கொ.ச. ஆசிய அனர்த்த ஆயத்த நிலையத்தின் கூட்டொத்துழைப்பில் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 22-24 ஆம் திகதி வரை விவசாயத் தொழில்நுட்பப் பரிமாற்றல் (DSSAT) மாதிரிப் பயிற்சி வேலையரங்குக்கான தீர்மான உதவு முறைமை பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைத்தது.

- காநிலை மாற்றத்தில் உயிரியல் சுற்றாடல் நெகிழ்தன்மையைக் கட்டியெழுப்புவதற்கான பிரதான காலநிலைத் தகவல் பிரயோக நெறிப்படுத்தல் தொடர்பான கொள்கை சார்ந்த தலையீடு பற்றிய வேலையரங்கு 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆம் திகதி நடத்தப்பட்டது. ஆசிய அனர்த்த ஆயத்த நிலையத்தின் கூட்டொத்துழைப்பில் உயர் அதிகாரிகள் பலர் இந்த வேலையரங்கில் பங்குபற்றினர்.


இ.வி.ஆ.கொ.ச. வெளியீடுகள்



SLJFA என்ற இலங்கை உணவு விவசாய சஞ்சிகை, விவசாய ஆராய்ச்சி நிறுவகங்களுக்கு இடையில் நிலவும் உறவுகளை தேசிய மற்றும் சர்வதேச அளவுகளில் மேம்படச்செய்வதற்காகவும், விவசாய ஆராய்ச்சியில் சிறப்புப் பெறுவதற்கு உதவுவதற்காகவும் மற்றும் விவசாய ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்காகவும், இ.வி.ஆ.கொ.ச. சட்டத்தின் 10 (f) மற்றும் (j) ஆகிய பிரிவுகளுக்கு இணங்க இ.வி.ஆ.கொ.ச. மூலம் பிரசுரிக்கப்படுகின்றது. தொகுதி 01 வெளியீடு 01 இல் பன்னிரெண்டு ஆராய்ச்சிப் பத்திர ஆவணங்கள் வெளியிடப்பட்டன.



SLJFA என்ற இலங்கை உணவு விவசாய சஞ்சிகை, விவசாய ஆராய்ச்சி நிறுவகங்களுக்கு இடையில் நிலவும் உறவுகளை தேசிய மற்றும் சர்வதேச அளவுகளில் மேம்படச்செய்வதற்காகவும், விவசாய ஆராய்ச்சியில் சிறப்புப் பெறுவதற்கு உதவுவதற்காகவும் மற்றும் விவசாய ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்காகவும், இ.வி.ஆ.கொ.ச. சட்டத்தின் 10 (f) மற்றும் (j) ஆகிய பிரிவுகளுக்கு இணங்க இ.வி.ஆ.கொ.ச. மூலம் பிரசுரிக்கப்படுகின்றது. தொகுதி 01 வெளியீடு 02 இல் ஏழு ஆராய்ச்சிப் பத்திர ஆவணங்கள் வெளியிடப்பட்டன.



பூ வளர்ப்பு ஆராய்ச்சி பற்றிய எட்டாவது மாநாடு (NaSFLOR - 2015) இ.வி.ஆ.கொ.ச. பூ வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய குழுவும், தேசியத் தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமும் இணைந்து பேராதெனிய ரோயல் தாவரவியல் பூங்கா வளாகத்தில் 2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 21 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தன. பூ வளர்ப்பு சம்பந்தமான ஆராய்ச்சி பற்றிய சுருக்கமான விபரங்கள் குறித்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அத்தகைய விபரங்கள் 2015 NASFLOR என்ற நூலில் பிரசுரிக்கவும் பட்டன.

பதவியணியின் சாதனைகள்

கருத்தரங்குகளிலும் மற்றும் மாநாடுகளிலும் பங்குபற்றிய விபரங்கள்

பெயரும் பதவியும்	நாடும் நகரமும்	விபரங்கள்	காலப் பகுதி
பேராசிரியர் ஏ.ஆர். ஆரியரத்ன, செயலாளர்/பணிப்பாளர்	மலேசியா, கோலாலம்பூர்	ஆற்றல் அபிவிருத்திப் பயிற்சி வேலையரங்கின் தாக்கங்களையும் மற்றும் பலன்களையும் அளவிடுவதைத் திட்டமிடுதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்	2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 - 08 ஆம் திகதி வரை
பேராசிரியர் ஏ.ஆர். ஆரியரத்ன, செயலாளர்/பணிப்பாளர்	தாய்லாந்து, பாங்கொக்	உயர் மட்டக் கொள்கைப் பேச்சுவார்த்தை நிகழ்ச்சித்திட்டம்	2015 ஆம் ஆண்டு திசம்பர்

பெயரும் பதவியும்	நாடும் நகரமும்	விபரங்கள்	காலப் பகுதி
			மாதம் 8-9 ஆம் திகதி வரை
பேராசிரியர் ஏ.ஆர். ஆரியரத்ன, செயலாளர்/பணிப்பாளர்	தாய்லாந்து, பாங்கொக்	APAARI நிறைவேற்றுக் குழுக் கூட்டம்	2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10 ஆம் திகதி
கலாநிதி கே.கே.டீ.எப்.எப். நிரன்ஜன்	தாய்வான், தெய்ப்பி	தாய்வான் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பு (APO), விவசாய மன்றம் (COA), விவசாய ஆராய்ச்சி நிறுவகங்களுக்கான ஆசிய பசுபிக் அமைப்பு ஆகியவற்றினால் நடத்தப்பட்ட அதிக பிரத்தியேக பல நாட்டு அவதானிப்பு ஆய்வுக்கான கிராயமிப் பொருளியல்கள் மறுசீரமைப்பு	2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 - 20 ஆம் திகதி வரை
கலாநிதி ரீ.யூ. திலக்கவர்த்தன	அவுஸ்திரேலியா, மெல்பேர்ன்	தெற்காசிய பிராந்தியத்தில் பாரம்பரிய கலாசார / அறிவு, உணவுப் பாதுகாப்பு என்பவற்றுக்கு இடையில் நிலவும் உறவுகளைப் புரிந்து கொள்ளல் / வளர்த்தல் பற்றிய DFAT நட்புறவு	2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் 2015 ஆம்

பெயரும் பதவியும்	நாடும் நகரமும்	விபரங்கள்	காலப் பகுதி
			ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி வரை
கலாநிதி என்.எஸ். ஜயசேக்கர	அவுஸ்திரேலியா, மெல்பேர்ன்	தெற்காசிய பிராந்தியத்தில் பாரம்பரிய கலாசார / அறிவு, உணவுப் பாதுகாப்பு என்பவற்றுக்கு இடையில் நிலவும் உறவுகளைப் புரிந்து கொள்ளல் / வளர்த்தல் பற்றிய DFAT நட்புறவு	2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி வரை
கலாநிதி பி.எச்.ஏ.பி.சி. கிரிஹகம	அவுஸ்திரேலியா, மெல்பேர்ன்	தெற்காசிய பிராந்தியத்தில் பாரம்பரிய கலாசார / அறிவு, உணவுப் பாதுகாப்பு என்பவற்றுக்கு இடையில் நிலவும் உறவுகளைப் புரிந்து கொள்ளல் / வளர்த்தல் பற்றிய DFAT நட்புறவு	2015 ஆம் ஆண்டு செப்டம்பர் 18 ஆம் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு

பெயரும் பதவியும்	நாடும் நகரமும்	விபரங்கள்	காலப் பகுதி
			ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதி வரை

வெளியீடுகள்:

எப். நிரன்ஜன் மற்றும் சி. க்லென் (2015): விவசாய சுற்றுலா சாத்தியம் தொடர்பில் விவசாயிகளின் உள்ளுணர்வை மதிப்பிடுதல்: விநியோக சார் பகுப்பாய்வு, சுற்றுலா முகாமைத்துவம் (சமர்ப்பிக்கப்பட்டது)

எப். நிரன்ஜன் மற்றும் சி. க்லென் (2015): கிராமிய இறப்பர் சுற்றுலா: அவுஸ்திரேலியா தெற்குக் குறுக்குப் பல்கலைக்கழகத்தில் 2015 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 2-5 ஆம் திகதி வரை நடைபெற்ற அவுஸ்திரேலிய சுற்றுலா மற்றும் உபசரணைக் கல்விக்கான சபையில் வளர்ப்பவர்களின் உள்ளுணர்வு சாத்தியத்தை மதிப்பிடுதல் பற்றிய ஆராய்ச்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

எப். நிரன்ஜன், எம்.பி.சி. உத்திக, எம்.சி.எஸ். பன்டிலன் மற்றும் என்.பி. சிங் (2015): இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கான விவசாயப் பாதிப்பு பற்றி மதிப்பிடுதல், உணவு விவசாய இலங்கை சஞ்சிகை 1(1): 85-92.

எஸ்.எம்.பி.சி. பத்மினி (2015): இலங்கையில் சிறிய அளவில் பூந்தாவரங்களை வளர்ப்பவர்களுக்கான நேரடி சந்தை முறைமையை நடைமுறைப்படுத்துதல், நேரடி சந்தைப்படுத்தலினூடாக சிறு விவசாயிகளுக்கான சந்தைப் பிரவேசம் பற்றிய பிராந்திய மாநாட்டு நடவடிக்கைகள், உணவு விவசாய அமைப்பு (உ.வி.அ), தாய்லாந்து: 11.

எஸ்.எம்.பி.சி. பத்மினி மற்றும் ரீ.டீ. கொடகொட (2015): இலங்கையில் பூ வளர்ப்புத் தொழிலின் தற்போதை நிலையும் மற்றும் எதிர்கால நிலையும், தெற்காசியாவில் சமூகப் பொருளாதார சமத்துவத்தை ஊக்குவிப்பது பற்றிய சர்வதேச மாநாட்டு நடவடிக்கைகள்: சவால்களும் எதிர்கால நன்மைகளும் (ICPSE), தேசிய விஞ்ஞான மன்றம், இலங்கை: 52

எஸ்.எம்.பி.சி. பத்மினி மற்றும் ரீ.டீ. கொடகொட, ஆர். சமரதுங்க மற்றும் எஸ்.ஏ. கிரிஷ்ணராஜா (2015): பூ வளர்ப்புத் தொழிலில் பெண்களின் நிலை: மேல் மாகாண அசல் பிரதிகள், பூ வளர்ப்பு ஆராய்ச்சி பற்றிய தேசிய மாநாடு, தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், இலங்கை: 27.

என்.யூ.எம். பெரேரா, பி.இ. காலியதாச, எஸ்.எம்.பி.சி. பத்மினி மற்றும் ஜே.கே.எம்.டீ. சந்திரசிறி (2015): தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு கதிர்காமம் மற்றும் இரத்தினபுரி சமய ஸ்தலங்களிலுள்ள பூ வியாபாரிகளின் சமூக அந்தஸ்து, பூ வளர்ப்பு ஆராய்ச்சி பற்றிய தேசிய மாநாடு, தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், இலங்கை: 14.

மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டம்:

கருத்திட்டத் தலைப்பு: NSF வழங்கிய இலங்கையிலுள்ள பூ வளர்க்கும் பெண்களுக்கான பூ வளர்ப்பு உதவி வலையமைப்புகளின் அபிவிருத்தி, மானிய இலக்கம்: RG/2015/SS/01

பட்டதாரி மாணவர் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் மேற்பார்வை:

மாத்தறை மாவட்டத்திலுள்ள பெரிய வெங்காய விவசாயிகளினது சிபாரிசு செய்யப்பட்ட பயிர்ச் செய்கைச் செயன்முறைகளின் அறிவு மட்டம் பற்றிய ஆய்வு

டீ.என். நாணயக்கார, UWU/EAG/11/0028, விலங்கியல் விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடம், ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம் - சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி எஸ்.எம்.பி. சந்திரா பத்மினி அவர்களினால் மேற்பார்வை செய்யப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு சமய ஸ்தலப் பிரதேசங்களிலுள்ள பூ வியாபாரிகளின் இன்றைய நிலைகளையும் பிரச்சினைகளையும் இனங்காணுதல்

டீ.என். நாணயக்கார, UWU/EAG/11/004, விலங்கியல் விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடம், ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம் - சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி எஸ்.எம்.பி. சந்திரா பத்மினி அவர்களினால் மேற்பார்வை செய்யப்பட்டது.

இ.வி.ஆ.கொ.ச. பதவியணி

இ.வி.ஆ.கொ.ச. சபைக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை 36 ஆகும். 2015 ஆம் ஆண்டிலிருந்து ஆளணி எண்ணிக்கை 24 ஆகும். பிரதிப் பணிப்பாளர் - ஆராய்ச்சி முகாமைத்துவம் (01 பதவி), வலையமைப்புக் கட்டுப்பாட்டாளர் (பதவி 01), ஆராய்ச்சி உத்தியோகத்தர் (பதவி 01), முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் (கணக்கெழுதுநர் 02, கிராபிக் டிசைனர் 02) - (பதவிகள் 04), முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத (பதவிகள் 03), சாரதி (பதவி 01) மற்றும் அலுவலக உதவியாளர் (பதவி 01) ஆகிய பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

2015 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள இ.வி.ஆ.கொ.ச. பதவியணி நிலை பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தலைவர்

கலாநிதி ஜே.டீ. சமரசிங்க, BA, M.Phil, M.Sc., PhD.
(2010 ஆம் ஆண்டு முதல் 2015.01.08 ஆம் திகதி வரை)
கலாநிதி எஸ்.எஸ்.பீ.டீ.ஜி. ஜயவர்த்தன B.Sc. (விவசாயம்), M.Sc. Ph.D.
(2015.11.06 ஆம் திகதி முதல்)

சிரேஷ்ட முகாமையாளர்

திரு பிரபாத் விமல் குமார, B.A., M.A., செயலாளர்/பணிப்பாளர்
(2010 ஆம் ஆண்டு முதல் 2015.01.08 ஆம் திகதி வரை)
கலாநிதி ஏ.ஆர். ஆரியரத்ன, B.Sc. (விவசாயம்), M.Sc. Ph.D., செயலாளர்/பணிப்பாளர்
(2015.03.04 ஆம் திகதி முதல்)
கலாநிதி ரீ.யூ. திலக்கவர்த்தன, M.Sc. (விவசாயம்), Ph.D., சிரேஷ்ட விஞ்ஞானி
கலாநிதி கே.கே.டீ.எப்.எப். நிரன்ஜன், B.Sc. (விவசாயம்), Ph.D., சிரேஷ்ட விஞ்ஞானி
கலாநிதி பி.எச்.ஏ.பி.சி. கிரிஹகம, B.Sc. (விவசாயம்), Ph.D., சிரேஷ்ட விஞ்ஞானி

கலாநிதி என்.எஸ். ஜயசேக்கர, B.Sc. (விஞ்ஞானம்), Ph.D., சிரேஷ்ட விஞ்ஞானி

கல்வி மற்றும் ஆராய்ச்சி

கலாநிதி எஸ்.எம்.பி.சி. பத்மினி, B.Sc. (விவசாயம்), Ph.D., சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்

திருமதி சி. தவுலகல, B.Sc., M.Sc. (விவசாயம்), ஆராய்ச்சி உத்தியோகத்தர்

திரு எஸ் திஸாநாயக்க, B.Sc. (விவசாயம்), ஆராய்ச்சி உத்தியோகத்தர்

முகாமையாளர்

திரு டப்ளியூ.எம்.டீ.பீ. அபேரத்ன, ப.பி.ப. டிப்ளோமா (கணக்கியல், நிதியியல் முகாமைத்துவம்), மனித உரிமைகள் டிப்ளோமா (பேராதெனியப் பல்கலைக்கழகம்), HNDA, AAT, ACMA, ACPM, ICASL - நடுத்தர, இலங்கை, FIAB, IFA - லண்டன்

*திருமதி ரீ.ஐ.ஐ. பீரிஸ், ASLLA, நூலகர் /தகவல் உத்தியோகத்தர் (*தனிப்படுத்திய)

கனிஷ்ட முகாமையாளர்

திருமதி கே.ஏ.டீ. சேத்திக்கா, B.Sc. (விவசாயம்), நிருவாக உத்தியோகத்தர்

முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத)

திருமதி என்.எம். விதானாச்சி

திருமதி எச்.எச். பட்டகொட

ஜி.எல். லவலகே

எம்.பீ.எஸ். தர்ஷனி

திருமதி ஜி.ஏ.பி.கே. திஸாநாயக்க

ஏ.பீ. அன்ஜலீ

திரு கே.ஜி.எஸ்.சி. வனிகசேக்கர

ஏ.பி.எம்.டீ.கே. சமரஜீவா

திரு ஆர்.பி.என்.பீ. பிரேமதிலக்க

ஆரம்ப மட்டத் தேர்ச்சிபெற்ற ஊழியர்கள்

திரு எஸ்.கே.ஆர்.கே. ஜயசூரிய, சாரதி

திரு டீ.ஜி.ஏ.எஸ். திஸாநாயக்க, சாரதி

ஆரம்ப மட்ட தேச்சிபெறாத ஊழியர்கள்

திரு என்.ஏ.கே. வீரகொடி, அலுவலக உதவியாள்


திரு இ.ஏ.எல்.எஸ். சாந்த, அலுவலக உதவியாள்

நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்தல்

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை தனது துரித வேலை நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதில் கடுமையாக உழைத்து ஒத்துழைப்பை நல்கிய அனைத்து ஊழியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. ஊழியர்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பும் மற்றும் ஒத்துழைப்பும் இல்லாமல், இந்த ஆண்டில் பூர்த்தி செய்த வேலைப் பரிமாணங்களை ஒரு போதும் அடைந்திருக்க முடியாது. எல்லா நேரங்களிலும் விலைமதிக்க இயலாத உதவி, ஒத்தாசைகளை நல்கிய இந்த சபையின் தலைவருக்கும் மற்றும் சபையின் உறுப்பினர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை உரித்தாக்க விரும்புகின்றோம்.

2015 ஆம் ஆண்டின் வேலைத் திட்டத்தை வெற்றிகரமான முறையில் நிறைவு செய்யும் பொருட்டு, இ.வி.ஆ.கொ.ச. சபைக்கு நல்கிய சிறந்த ஒத்துழைப்புக்காக கௌரவ கமத்தொழில் அமைச்சருக்கும், கௌரவ கமத்தொழில் பிரதி அமைச்சரக்கும், அமைச்சின் செயலாளருக்கும், மேலதிகச் செயலாளர்களுக்கும், தலைமைக் கணக்காளருக்கும், கருத்திட்டங்களின் பணிப்பாளருக்கும், கமத்தொழில் அமைச்சின் ஏனைய ஊழியர்களுக்கும் அமைச்சினது கணக்காய்வுப் பிரிவின் ஊழியர்களுக்கும் இ.வி.ஆ.கொ.ச. நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது.

ஒத்துழைப்பை நல்கிய அரச துறை நிறுவனங்களுக்கும், தனியார் துறை நிறுவனங்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



FINAL ACCOUNTS – 2015

Ministry of Agriculture

Sri Lanka Council for Agricultural Research Policy

114/9, Vidya Mawatha

Colombo 07

Statement of Financial Position

As at 31st December 2015

	Notes	2015 LKRs. Cts.	2014 LKRs. Cts.
ASSETS			
Property, plant & equipment	07	18,796,555	28,232,233
Total non current assets		**18,796,555**	**28,232,233**
Inventories	08	400,253	243,265
Trade & other receivables	09	4,979,888	5,705,648
Cash at bank	10	16,494,337	13,032,456
Total current assets		**21,874,478**	**18,981,370**
TOTAL ASSETS		**40,671,032**	**47,213,603**
EQUITY & LIABILITIES			
Capital & Reserves			
CARP Fund	11	27,639,257	32,756,007
Treasury Grants - Research	12	4,041,212	10,215,857
Special Research Grants	13	870,737	1,077,837
Accumulated Surplus / (Deficit)		(7,262,190) ✓	(10,856,459)
Gift		116,892 ✓	116,892
		25,405,908	**33,310,134**
Retirement Benefit (Gratuity)	14	7,607,350	5,763,638
Total non current liabilities		**7,607,350**	**5,763,638**
Current Liabilities			
Trade & other payables	15	7,636,859	8,139,831
Floriculture Project Payable		20,915 ✓	
Total current liabilities		**7,657,774**	**8,139,831**
TOTAL EQUITY & LIABILITIES		**40,671,032**	**47,213,602**

These Financial Statements are in compliance with the requirements of the finance Act, No.38 of 1971 and the Public sector accounting standards in Sri Lanka.
The Governing Council is responsible for preparation of these Financial Statements.We approved and signed on behalf of the SLCARP council.

Prepared By ; Mrs. A.B.A.P.Udayangi - MA

Checked By ; Mr B A K Jayasinghe

S. Jayasekera
Accountant (Acting) 19/4/16

Dr.S.D.G.Jayawardena
Chairman to the Council
Board Member

Prof.A.R.Ariyarathne
Executive Director/ Secretary to the Council
board Member

Prof. A.R. Ariyaratne
Secretary/Director - SLCARP

Statement of Comperhensive Income for the Year ended 31 December 2015

	Note	2015 LKRs. Cts.	2014 LKRs. Cts.
Treasury Grants	01	30,258,000	26,015,190
Other Income	02 (a)	581,941	250,917
Government grant for depreciation	02 (b)	9,462,065	10,316,405
TOTAL INCOME		**40,302,006**	**36,582,512**
Administrative Expenses	03	36,670,405	38,210,593
Finance Cost	04	37,332	12,654
DIFFERENCE BETWEEN TREASURY GRANTS & OTHER INCOME AND TOTAL EXPENDITURE		3,594,269	(1,640,735)
Add / (Less) Prior Year Adjustment	05	-	-
Add / (Less) Write off Assets	06	-	-
EXCESS OF EXPENDITURE OVER INCOME		**3,594,269**	**(1,640,735)**
Balance B/F		(10,856,459)	(9,215,724)
Balance C/F		**(7,262,190)**	**(10,856,459)**

Sri Lanka Council for Agricultural Research Policy

Public Sector Entity - Statement of Changes in Net/Equity

For the year ended December 31st 2015

LKRs.

Attribute to owners of the controlling entity				
	CARP Fund	**Other Reserves**	**Accumulated Surpluses/ (Deficits)**	**Total Net Assets/ Equity**
Balance at January 01st 2015 (Note - 01)	32,756,007	116,892	(10,856,459)	**22,016,440**
Office Motor Vehicle	-	-	-	-
total recognized revenue and expenses for the period	(5,118,432)	-	3,347,837	- **(1,770,595)**
Balance at December 31st 2015	**27,637,575**	**116,892**	**(7,508,622)**	**20,245,845**

Statement of Cash Flow

For the Year ended 31st December 2015

		2015 Rs. Cts.
CASH FLOWS FROM OPERATING ACTIVITIES		
Net Surplus/ (deficit) for the year		3,594,269
Non-cash movements		
Adjustment for		
Depreciation on property, plant & equipment		9,462,065
Treasury Grant Prior year Adjustment		(4,345,315)
Gift depreciation income		-
Interest Income		
Distress Loan Interest		(95,166)
Bank Deposits		(459,770)
Operating Profit Before Changes in Working Capital		8,156,082
Changes in Working Capital		
(Increase) / Decrease in Inventories		(156,988)
(Increase) / Decrease in trade & other receivables		725,760
Increase / (Decrease) in creditors and payables		(482,057)
Increase / (Decrease) Retirement Benefit (Gratuity)		1,843,712
Cash Generated from Operations		10,086,510
Gratuity paid		-
Net Cash Flows from Operations Activities		10,086,510
CASH FLOWS FROM INVESTING ACTIVITIES		
Purchase of property, plant & equipment		(26,386)
Research investments		(2,807,985)
Interest income		
Distress Loan Interest		95,166
Bank Deposits		459,770
Net Cash Flows from Investing Activities		(2,279,435)
CASH FLOWS FROM FINANCING ACTIVITIES		
Treasury Grant Received		978,655
Net Fund received		(5,116,750)
Special Research Grants Received		(207,100)
Net Cash Flows from Financing Activities		(4,345,195)
Net increase/ (decrease) in cash & cash equivalents		3,461,880
Cash & cash equivalents at beginning of the period		13,032,456
Cash & Cash Equivalents at end of period	(Note 10)	16,494,337

